இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

மட்டம் III பரீட்சை – ஜூலை 2025

(Level III Examination – July 2025)

பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(301) நிதி அறிக்கையிடல் (FAR)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்
மட்டம் III பரீட்சை – ஜூலை 2025
(301) நிதி அறிக்கையிடல்
பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

நான்கு (04) கட்டாயவினாக்கள்
(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி – A

வினா 01 தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 01

(a) நிதி அறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச் சட்டகத்தின்படி இரு அடிப்படையான பண்புசார் குணவியல்புகள் பொருத்தப்பாடு மற்றும் உண்மையான பிரதிநிதித்துவம் என்பனவாகும்.

ஒரு தகவல் தீர்மானங்களில் மாறுதலை ஏற்படுத்தும் இயலுமை கொண்டதாக இருந்தால், அத் தகவல் பொருத்தப்பாடான தகவலாகக் கருதப்படும். பொருத்தப்பாடான தன்மையின் உப குணவியல்புகளில் முற்கணிக்கத்தக்க பெறுமதி, உறுதிப்படுத்தத்தக்க பெறுமதி மற்றும் பொருண்மை ஆகியவை உள்ளடங்கும்.

உண்மையான பிரதிநிதித்துவக் கோட்பாட்டுக்கு அமைவாக, நிதி அறிக்கைகள் வார்த்தைகளிலும் எண்களிலும் பொருளாதார நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். உண்மையான பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு, தகவல் முழுமையானதாக, நடுநிலையானதாக, மற்றும் வழுக்களிலிருந்து விடுபட்டதாகக் காணப்படல் வேண்டும்.

(03 புள்ளிகள்)

(b)
- ஒப்பிடத்தக்க தன்மை
- உறுதிசெய்யக்கூடிய தன்மை
- உரிய நேரகாலத் தன்மை
- விளங்கிக்கொள்ளக்கூடிய தன்மை

(மேற்கண்டவற்றில் இரண்டு மாத்திரம் போதுமானது)

(02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 02 தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 03

- வணிக மாதிரி
- நிறுவன கண்ணோட்டம் மற்றும் வெளிவாரிச் சூழல்
- இடர் மற்றும் வாய்ப்புகள்

- தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு
- கண்ணோட்டம்
- ஆளுகை
- செயற்திறன்
- தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தலின் அடிப்படை

(மேற்கண்டவற்றில் ஐந்து மாத்திரம் போதுமானது)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 03 தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 05

நன்மதிப்புக் கணிப்பீடு	**ரூ. 000**	
மொத்த முதலீடு		
தாய்க் கம்பனியின் கருதுகை மதிப்பு	15,000	
கட்டுப்பாடற்ற பாத்தியத்தின் சீர்மதிப்பு	4,500	19,500
(-) கையகப்படுத்தல் திகதியில் துணைக்கம்பனி நிகர சொத்துக்களின் சீர்மதிப்பு		
கூறப்பட்ட மூலதனம்	10,000	
நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்	4,500	
காணி மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	1,500	16,000
நன்மதிப்பு		3,500

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 04 தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 02

(a) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஏற்பிசைவு மூலப்பிரமாணங்கள்

- உருப்படியுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு உட்பாயும் நிகழ்தகவு காணப்பட்டால், மற்றும்
- உருப்படியின் கிரயம் நம்பகமான முறையில் அளவிடத்தக்கதாக இருந்தால்.

(02 புள்ளிகள்)

(b) இருப்பு மதிப்பீட்டு முறையிலான மாற்றம்

இருப்பு மதிப்பீட்டு முறையை முதல் உள் முதல் வெளி (FIFO) முறையில் இருந்து எடையளித்த சராசரிக் கிரய (WAC) முறைக்கு மாற்றுவது கணக்கியல் கொள்கை மாற்றமாகும். சிறிய நடுத்தரளவிலான உரிமங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS for SMEs) அமைவாக கணக்கியல் கொள்கை மாற்றம் ஒரு தன்னார்வ மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டால், அதற்கு ஒரு முற்கால விளைவுள்ள வகையிலான பிரயோகம் தேவைப்படுத்தப்படுகிறது. எனவே, நிறுவனம் ஒப்பீட்டுத் தொகைகள் மற்றும் உரிமை மாற்றக் கூற்றை மறுகூற்றுப்படுத்தி முற்கால விளைவுள்ள பிரயோகத்தைப் பயன்படுத்த வேண்டும்.

aat SRI LANKA

தேறத்தக்க நிகர பெறுமதி

இருப்பானது, கிரயம் அல்லது தேறத்தக்க நிகர பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதோ அந்தப் பெறுமதியில் அளவிடப்படும். கொடுக்கப்பட்ட தகவலின்படி தேறத்தக்க நிகர பெறுமதியானது கிரயத்தை விட அதிகமாக உள்ளது.

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

aat SRI LANKA

பகுதி A முடிவு

வினா 05 தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 03

கெமிரோ (பிரைவேட்) லிமிடெட்

மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான

காசுப்பாய்ச்சல் கூற்று

ரூ. 000'

தொழிற்பாட்டு நடவடிக்கைகள்		
வரிக்கு முந்தைய இலாபம் - **செய்கை 2**	15,337	
+/- சீராக்கங்கள்		
வட்டிச் செலவு	8,100	
பணிக்கொடை செலவு	1,750	
இயந்திர அகற்றல் ஆதாயம் - **செய்கை 5**	(2,750)	
பெறுமானத் தேய்வு. – **செய்கை 4**	35,890	
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்பான தொழிற்பாட்டுக் காசுப் பாய்ச்சல்	58,327	
(-) செலுத்தப்பட்ட பணிக்கொடை	(6,970)	
(-) செலுத்தப்பட்ட வரி - **செய்கை 1**	(5,800)	
	45,557	
தொழிற்படு மூலதன மாற்றங்கள்		
இருப்புகளிலான வீழ்ச்சி	51,019	
வியாபார மற்றும் பிற வருமதிகளிலான அதிகரிப்பு	(12,596)	
வியாபார மற்றும் பிற சென்மதிகளிலான அதிகரிப்பு	4,980	
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		88,960
முதலீட்டு நடவடிக்கைகள்		
இயந்திர அகற்றல் வருவாய்	9,500	
புதிய இயந்திரக் கொள்வனவு – **செய்கை 3**	(78,470)	
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		(68,970)
நிதி நடவடிக்கைகள்		
பெறப்பட்ட கடன்கள் - **செய்கை 7**	10,000	
செலுத்தப்பட்ட வட்டி – **செய்கை 6**	(1,710)	
செலுத்தப்பட்ட கடன்கள்	(20,500)	
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	(1,280)	
நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		(13,490)
ஆண்டுக்கான நிகர காசுப்பாய்ச்சல்		**6,500**
ஆரம்பக் காசு மற்றும் காசுக்கு சமமானவை		8,900
இறுதிக் காசு மற்றும் காசுக்கு சமமானவை		**15,400**

aat SRI LANKA

செய்கைகள்

செய்கை 1: ஆண்டுக்கான வரிச் செலவு

வரிச் செலவு

வரவு வரிச் செலவு	3,400	
செலவு செலுத்த வேண்டிய வரி		3,400

செலுத்த வேண்டிய வரி

காசு	5,800	மீதி மு. கொ. செ	5,640
மீதி மு. கொ. வ	3,240	வரிச் செலவு	3,400
	9,040		**9,040**

செய்கை 2:

நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்

வரிச் செலவு	3,400	மீதி மு. கொ. வு	114,939
பங்கிலாபம்	1,280	வரிக்கு முன் இலாபம்	15,337
மீதி மு. கொ. செ	125,596		
	130,276		**130,276**

வரி மற்றும் வட்டிக்கு முன் இலாபம்	23,437
(-) வட்டி செலவு	(8,100)
வரிக்கு முன் இலாபம்	**15,337**

செய்கை 3:

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

மீதி மு. கொ. வ	156,930	அகற்றல் இலாபம் / நட்டம்	15,000
காசு	78,470	மீதி மு. கொ. செ	220,400
	235,400		**235,400**

செய்கை 4:

திரண்ட பெறுமானத் தேய்வு

அகற்றல் ஆதாயம் / இழப்பு	8,250	மீதி மு. கொ. வ	101,460
மீதி மு. கொ. செ	129,100	தேய்மானம்	35,890
	137,350		**137,350**

செய்கை 5:

அகற்றல் ஆதாயம் அல்லது இழப்பு

இயந்திரம்	15,000	திரண்ட தேய்மானம்	8,250
இலாப நட்டம்	2,750	காசு	9,500
	17,750		**17,750**

அகற்றல் வருமானம்

வரவு காசு	1,500	
செலவு அகற்றல் ஆதாயம் அல்லது இழப்பு		1,500

aat SRI LANKA

அகற்றப்பட்ட இயந்திரங்களின் கிரயம்

வரவு அகற்றல் ஆதாயம் அல்லது இழப்பு 15,000

செலவு இயந்திரங்கள் 15,000

அகற்றப்பட்ட இயந்திரங்களின் திரண்ட தேய்மானம்

அகற்றப்பட்ட இயந்திரங்களின் திரண்ட தேய்மான ஆரம்ப மீதி	7,500
01-04-2024 முதல் 01-10-2024 வரையான தேய்மானம் (15,000/10X6/12)	750
அகற்றப்பட்ட இயந்திரங்களின் மொத்த திரட்டப்பட்ட தேய்மானம்	**8,250**

செய்கை 6: வட்டிச் செலவு

வரவு வட்டிச் செலவு 8,100

செலவு செலுத்த வேண்டிய வட்டி 8,100

செலுத்த வேண்டிய வட்டி

காசு	1,710	மீதி மு. கொ. வ	1,040
மீதி மு. கொ. சே	7,430	வட்டிச் செலவு	8,100
	9,140		**9,140**

செய்கை 7: கடன்கள் (நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத பகுதிகள்)

புதிய கடன் பெறுகை

வரவு காசு 10,000

செலவு வங்கிக் கடன் 10,000

வங்கி கடன்

காசு	20,500	மீதி மு. கொ. வ	42,900
மீதி மு. கொ. செ	32,400	காசு	10,000
	52,900		**52,900**

செய்கை 8:

பணிக்கொடை ஏற்பாடு

காசு	6,970	மீதி மு. கொ. வ	26,700
மீதி மு. கொ. செ	21,480	பணிக்கொடை செலவினம்	1,750
	28,450		28,450

(மொத்தம் 10 புள்ளிகள்)

SRI LANKA

வினா ஆறு தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 02

(a)

	2024/25	2025/26
ஏற்பிசைக்கப்பட வேண்டிய வருவாய்	436,174	91,826
செய்கைகள் 01 மற்றும் 02	01 மற்றும் 02	

செய்கை 01

செயற்திறன் கடமைகள்	**தனித்த விலைகள்**	**பரிவர்த்தனை ஒதுக்கீடு**	**வருவாய் ஏற்பிசைவுப் புள்ளி**
காற்றுச் சீராக்கி	360,000	344,348 (528,000 X 360,000/552,000)	வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளும் தருணத்தில் (01/04/2024)
பராமரிப்பு	192,000 (8,000 X 24 மாதங்கள்)	183,652 (528,000 X 192,000/552,000)	சேவைக் காலம் 24 மாதங்கள் ஈறாக
மொத்தப் பெறுமதி	552,000	528,000	

செய்கை 02

	2024/25	2025/26
காற்றுச் சீராக்கி	344,348	-
தலா ஆண்டுக்கான பராமரிப்பு சேவை	91,826	91,826
மொத்தம்	436,174	91,826

(04 புள்ளிகள்)

(b)

31-03-2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான
முற்றடக்க வருமானக் கூற்றின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி

ரூபா.

பயன்பாட்டு உரிமைச் சொத்தின் பெறுமானத் தேய்வு (செய்கை 1)	(1,750,000)
குத்தகை வட்டி (செய்கை 2)	(840,000)

31-03-2025 அன்று உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்றின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி

ரூபா.

நடைமுறையல்லாச் சொத்துக்கள்	
பயன்பாட்டு உரிமை சொத்து (செய்கை 1)	5,250,000
நடைமுறையல்லாப் பரிப்புக்கள்	
குத்தகைப் பரிப்பு (செய்கை 2)	3,390,850
நடைமுறைப் பரிப்புக்கள்	
குத்தகை பொறுப்பு (செய்கை 2)	1,389,921

SRI LANKA

செய்கை 01 - பயன்பாட்டு உரிமை சொத்து

	ரூபா.
ஆரம்பக் கட்டணம்	1,000,000
ஆரம்பக் குத்தகைப் பரிப்பு	6,000,000
கிரயம்	7,000,000
(-) திரண்ட பெறுமானத் தேய்வு (7,000,000/4)	(1,750,000)
கொண்டுசெல்லல் பெறுமதி	5,250,000

செய்கை 02 – குத்தகைப் பரிப்பு

		ரூபா.
ஆரம்ப குத்தகைப் பரிப்பு		6,000,000
குத்தகை வட்டி (6,000,000 X 14%)		840,000
(-) குத்தகைத் தவணைக் கட்டணம்		(2,059,229)
இறுதிக் குத்தகைப் பரிப்பு		4,780,771
தற்போதைய பகுதி		
அடுத்த தவணைக் கட்டணம்	2,059,229	
(-) அடுத்த தவணைக் கட்டணத்திலான வட்டி (4,780,771 X 14%)	(669,308)	1,389,921
நடைமுறையல்லாத பகுதி		
இறுதிப் பரிப்பு	4,780,771	
(-) தற்போதைய பகுதி	(1,389,921)	3,390,850

ஆண்டு	மு.கொ.வ	தவணைக் கட்டணம்	வட்டி	மூலதனம் மு.கொ. செ	ஆண்டு
1	6,000,000	2,059,229	840,000	1,219,229	4,780,771
2	4,780,771	2,059,229	669,308	1,389,921	3,390,850
3	3,390,850	2,059,229	474,719	1,584,510	1,806,341
4	1,806,341	2,059,229	252,887	1,806,341	-

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா ஏழு தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 02

(a)

குறியீடு	**சீராக்கம் அவசியமானதா / சீராக்கம் அவசியமற்றதா**	**விளக்கம்**
(1)	சீராக்கம் தேவையானது	2025 மார்ச் 31 ஆம் திகதி அன்றுள்ளவாறு மோசடி ஏற்கனவே நடந்திருப்பதால், மோசடி வெளிப்படுத்தப்பட்டமை அறிக்கையிடல் காலப் பகுதியில் ஒரு நிகழ்வு இடம்பெறவிருந்ததை உறுதிப்படுத்துகிறது. எனவே, மோசடியின் காரணமான இழப்பு மார்ச் 31, 2025 அன்று

		முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படும்.
(2)	சீராக்கம் அவசியமற்றது	பங்கொன்றின் விலையானது அந்நேரத்தில் நிலவிய சந்தை சூழ்நிலைகளை சார்ந்ததாகும். ஏப்ரல் 10, 2025 அன்று பங்கு விலை குறைந்துள்ளமை, அந்தத் திகதியில் ஏற்பட்ட சந்தை சரிவினால் விளைந்ததாகும். இது அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட ஒரு சூழ்நிலையாகும். எனவே, மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த நிதிக்கூற்றுக்களில் அதை சீராக்குவது அவசியமற்றது. இருப்பினும், தாக்கம் கணிசமானதாக இருந்தால், ஒரு வெளிப்படுத்தலை வழங்கலாம்.
(3)	சீராக்கம் அவசியமற்றது	சாதாரண பங்குகளுக்கான இறுதிப் பங்கிலாபமானது நிதிக்கூற்றுக்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நிகழும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்படும். எனவே, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பங்கிலாபமானது, பங்கிலாபமாக அங்கீகரிக்கக்கப்படத்தக்க சட்டப்பூர்வத்தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இது ஒரு சீராக்கம் அவசியமற்ற நிகழ்வு. இருப்பினும், பங்கொன்றுக்கான பங்கிலாபம், மொத்தப் பங்கிலாபம் மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திகதி ஆகியவை வெளிப்படுத்தப்படும்.

(05 புள்ளிகள்)

(b)

(a) இறுதிப் பிற்போடப்பட்ட வரிப் பரிப்பு 2,100 (செய்கை 1)

(03 புள்ளிகள்)

(b) மொத்த வரிச் செலவு

	ரூபா. 000
ஆண்டுக்கான வருமான வரிச் செலவு – செய்கை 2	6,000
பிற்போடப்பட்ட வரி நீக்கல்	(1,400)
மொத்த வரிச் செலவு	4,600

(02 புள்ளிகள்)

செய்கை 01 – பிற்போடப்பட்ட வரிக் கணக்கீடு

விபரம்	**குாணி**	**கட்டடம்**	**மொத்தம்**
கணக்கீட்டு கொண்டுசெல்லல் பெறுமதி	10,000	38,500	48,500
(-) வரி அடிப்படை [கிரயம் – திரண்ட மூலதன விடுதொகை]	(10,000)	(31,500) [54,000-22,500]	(41,500)
தற்காலிக வேறுபாடு	-	7,000	7,000
வரி விதிக்கக்கூடிய அல்லது கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடு	தொடர்பற்றது	வரி விதிக்கக்கூடிய	வரி விதிக்கக்கூடிய

SRI LANKA

		தற்காலிக வேறுபாடு	தற்காலிக வேறுபாடு
		வரி வீதம்	30%
		இறுதி பிற்போடப்பட்ட வரி	2,100
		ஆரம்ப பிற்போடப்பட்ட வரிப் பரிப்பு	3,500
		பிற்போடப்பட்ட வரி நீக்கல்	(1,400)

செய்கை 02 – வருமான வரிக் கணித்தல்

	ரூ. 000
வரிவிதிக்கத்தக்க இலாபம்	20,000
வரி வீதம்	30%
ஆண்டுக்கான வருமான வரிச் செலவு	6,000

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி **B** முடிவு*

மூன்று (03) கட்டாயவினாக்கள் (மொத்தம் 50 புள்ளிகள்)	பகுதி - C

வினா எட்டு தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 03

(a) சிக்மா பிஎல்சி
மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான
இலாபநட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று

	குறிப்புகள்	ரூபா 000
வருமானம்		354,000
விற்பனைக் கிரயம்		(151,200)
மொத்த இலாபம்		202,800
பிற வருமானம்	**1**	8,600
விநியோகச் செலவுகள் **செய்கை 1**		(35,750)
நிர்வாகச் செலவுகள் **செய்கை 2**		(40,435)
நிதிச் செலவுகள் **செய்கை 3**		(14,050)
பிற தொழிற்பாட்டுச் செலவுகள் **செய்கை 10**		(2,000)
வரிக்கு முன்னான இலாபம்	**2**	119,165
வரிச் செலவு **செய்கை 9**	**3**	(9,750)
வரிக்குப் பின்னான இலாபம்		109,415
பிற முற்றடக்க விரிவான வருமானம்		2,000
மொத்த முற்றடக்க வருமானம்		111,415

(10 புள்ளிகள்)

(b) சிக்மா பிஎல்சி
மார்ச் 31, 2025 அன்று உள்ளவாறான
நிதிநிலைமைக் கூற்று

	குறிப்புகள்	ரூ. 000	ரூ. 000
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	4	55,365	55,365
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்பு		63,000	
வியாபார வருமதிகள்	5	35,550	
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்		55,525	154,075
மொத்த சொத்துக்கள்			209,440
உரிமையாண்மை			
கூறப்பட்ட மூலதனம்		50,000	
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		5,000	
பகிரப்படாத உழைப்புக்கள்		117,815	172,815

aat SRI LANKA

நடைமுறையல்லாப் பரிப்புகள்			
நீண்டகாலக் கடன் **செய்கை 5**		4,500	4,500
நடைமுறைப் பரிப்புகள்			
வியாபார சென்மதிகள்		20,725	
செலுத்தவேண்டிய வரி (-4,500)		7,750	
ஏனைய சென்மதிகள்	**6**	2,150	
கடனின் தற்போதைய பகுதி **செய்கை 5**		1,500	32,125
மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புகள்			209,440

(07 புள்ளிகள்)

(c) சிக்மா பிஎல்சி
மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான
உரிமை மாற்றங்களின் கூற்று

ரூ.000

	கூறப்பட்ட மூலதனம்	**மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்**	**பகிரப்படாத உழைப்புக்கள்**	**மொத்தம்**
01-0402024 அன்று உள்ளவாறான மீதி	50,000	3,000	8,400	61,400
மொத்த முற்றடக்க வருமானம்		2,000	109,415	111,415
31-03-2025 அன்று உள்ளவாறான மீதி	50,000	5,000	117,815	172,815

(03 புள்ளிகள்)

(d) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

கிரயம் / மீள்மதிப்பீடு	**காணி**	**கட்டடங்கள்**	**மோட்டார் வாகனங்கள்**	**மொத்தம்**
ஆரம்ப இருப்பு	28,000	23,000	14,000	65,000
சேர்ப்புகள் **செய்கை 4**		15,000		15,000
அகற்றல்கள்			(6,000)	(6,000)
மீள்மதிப்பீடு **செய்கை 7**	2,000			2,000
இறுதி இருப்பு	*30,000*	*38,000*	*8,000*	*76,000*
திரண்ட பெறுமானத் தேய்வு				
ஆரம்ப இருப்பு		13,500	6,500	20,000
ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு		535	1,600	2,135
அகற்றல்கள்			(1,500)	(1,500)
இறுதி இருப்பு	-	*14,035*	*6,600*	*20,635*
நிகர ஏட்டுப் பெறுமதி	**30,000**	**23,965**	**1,400**	**55,365**

(05 புள்ளிகள்)

குறிப்பு 01 பிற வருமானம்

	ரூபா 000
மோட்டார் வாகன அகற்றல் ஆதாயம்	500
பிற வருமானம்	8,100
	8,600

குறிப்பு 02 பின்வரும் செலவுகள் வரிக்கு முன்னான இலாபத்தில் கழிக்கப்பட்டன

	ரூபா 000
பெறுமானத் தேய்வு	2,135
அறவிடமுடியாக் கடன்	1,500
இழப்பீடு	2,000
கணக்காய்வுக் கட்டணம்	150

குறிப்பு 03 வரி

	ரூபா 000
நடைமுறை ஆண்டு வரிச் செலவு	9,750
முன்னைய ஆண்டு மிகை / குறை ஏற்பாடு	-
மொத்த வரிச் செலவு	9,750

குறிப்பு 04 வியாபார வருமதிகள்

	ரூபா 000
வியாபார வருமதி மீதி	41,000
(-) அறவிட முடியாக் கடன்கள்	(1,500)
அறவிட முடியாக் கடன்களுக்குப் பின்னரான வியாபார வருமதி மீதி	39,500
(-) வருமதிகளுக்கான விடுதொகை	(3,950)
வியாபார வருமதி மீதி கொண்டுசெல்லல் பெறுமதி	35,550

குறிப்பு 05 பிற சென்மதிகள்

	ரூபா 000
செலுத்த வேண்டிய இழப்பீடு	2,000
செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம்	150
	2,150

செய்கைகள்

செய்கை1: விளக்கமான செலவுக் கூற்று

விபரம்	**விற்பனைக் கிரயம்**	**நிர்வாகம்**	**விநியோகம்**	**நிதி**	**ஏனையவை**
கட்டடப் பெறுமானத் தேய்வு		535			
மோட்டார்வாகன பெறு. தேய்வு			1,600		
கடன்படுகைக் கிரயங்கள்				(450)	
அறவிடமுடியாக் கடன்			1,500		
வருமதிகளுக்கான விடுதொகை			3,950		
இழப்பீடு					2,000
கணக்காய்வுக் கட்டணம்		150			
பரீட்சை மீதியின் படியான மீதிகள்	151,200	39,750	28,700	14,500	
	151,200	**40,435**	**35,750**	**14,050**	**2,000**

aat SRI LANKA

செய்கை 02: மோட்டார் வாகன அகற்றல்

அகற்றல் ஆதாயம் அல்லது இழப்பு

மோட்டார் வாகனங்கள்	6,000	காசு	5,000
பிற வருமானம்	500	மோட்டார் வாகன திரண்ட பெறுமானத் தேய்வு	1,500
	6,500		**6,500**

அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் கிரயம்

வரவு அகற்றல் ஆதாயம் அல்லது இழப்பு 6,000
செலவு மோட்டார் வாகனம் 6,000

அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் திரண்ட பெறுமானத் தேய்வு

வரவு மோட்டார் வாகனத் திரண்ட பெறுமானத் தேய்வு 1,500
செலவு அகற்றல் ஆதாயம் அல்லது இழப்பு 1,500

அகற்றல் ஆதாயம் (5,000 – 4,500)

வரவு அகற்றல் ஆதாயம் அல்லது இழப்பு 500
செலவு பிற வருமானம் 500

செய்கை 03: தகுதிகாண் சொத்தின் கடன்படுகைக் கிரயம்

	ரூ. 000
கடன்	6,000
வட்டி வீதம்	10%
கட்டுமான காலம் (1/4/24 – 31/12/24)	9/12
மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்படுகைக் கிரயம்	450

வரவு மூலதனக் குறைவேலை இருப்பு 450
செலவு நிதிச் செலவுகள் 450

aat SRI LANKA

செய்கை 04: மூலதனக் குறைவேலையினை கட்டடக் கணக்கிற்கு மாற்றுதல்

கட்டடக் குறைவேலையானது 31-12-2024 அளவில் நிறைவுசெய்யப்பட்டதால், கிரயமானது கட்டடக் கணக்கிற்கு மாற்றப்படும்.

	ரூ. 000
மூலதனக் குறைவேலை கொண்டுசெல்லல் பெறுமதி	14,550
மூலதனமாக்கப்பட்ட கடன்படுகைக் கிரயம்	450
கட்டடக் கணக்கிற்கு மாற்றப்பட்ட மூலதனக் குறைவேலை இருப்பு	15,000

வரவு கட்டடம் 15,000

செலவு மூலதனக் குறைவேலை 15,000

செய்கை 05: கடன்களின் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத வகைப்படுத்தல்

LKAS 01 நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் நியமத்தின் படி, பொறுப்புகள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதவை என வகைப்படுத்தப்படும்.

	ரூ. 000
கடன் மீதி	6,000
நடைமுறைப் பகுதி (25%)	1,500
நடைமுறையல்லாத பகுதி (75%)	4,500

செய்கை 06: பெறுமானத் தேய்வு

சொத்து	**கட்டடம்**	**மோட்டார் வாகனம்**
கிரயம்	23,000	14,000
(-) அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் கிரயம்		(6,000)
	23,000	8,000
பயன்தரு ஆயுள்	50	5
காலப்பகுதி முழுதும் வைத்திருக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமானத் தேய்வு	460	1,600
மாற்றப்பட்ட மூலதனக் குறைவேலையின் பெறுமானத் தேய்வு 15,000/50X3/12	75	
மொத்தப் பெறுமானத் தேய்வு	535	1,600

செய்கை 07: காணி மீள்மதிப்பீடு

மீள்மதிப்பீடு ஆதாயம் / இழப்பு	**ரூ. 000**
மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகை	30,000
காணி கொண்டு செல்லல் பெறுமதி	28,000
மீள்மதிப்பீட்டு ஆதாயம்	2,000

வரவு காணி 2,000

செலவு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் (OCI மூலம்) 2,000

aat SRI LANKA

செய்கை 08: வருமதிகளுக்கான விடுதொகை

	ரூ. 000
அறவிட முடியாக் கடன்களுக்குப் பின்னரான வியாபார வருமதிகள்	39,500
வருமதிகளுக்கான விடுதொகை	10%
இறுதி வருமதிகளுக்கான விடுதொகை	3,950
வருமதிகளுக்கான விடுதொகை கொண்டுசெல்லல் பெறுமதி	-
வருமதிகளுக்கான விடுதொகை குறை ஏற்பாடு	3,950

வரவு வருமதிகளுக்கான விடுதொகை 3,950

செலவு வருமதிகளுக்கான விடுதொகை ஏற்பாடு 3,950

செய்கை 09: நடைமுறை ஆண்டு வரி

	ரூ. 000
நடைமுறை ஆண்டு வரிச் செலவு	9,750
செலுத்தப்பட்ட நடைமுறை ஆண்டு வரி (6,500 – 4,500)	(2,000)
நடைமுறை ஆண்டுக்காக செலுத்த வேண்டிய வருமான வரி	7,750

வரவு வரிச் செலவு 9,750

செலவு செலுத்தப்பட்ட வரி 2,000

செலவு செலுத்த வேண்டிய வருமான வரி 7,750

10 செலுத்த வேண்டிய இழப்பீடு

LKAS 37 ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள் நியமத்தின்படி முழு உரிமைகோரலையும் இழப்பீடாக செலுத்த வேண்டி ஏற்படும் நிகழ்தகவு உயர்வாக இருப்பதாக வழக்கறிஞர்கள் உறுதிப்படுத்தியுள்ளதால், ஒரு ஏற்பாட்டினை மேற்கொள்வது அவசியமாகவுள்ளது.

வரவு	இழப்பீட்டுச் செலவு	2,000
செலவு	செலுத்த வேண்டிய இழப்பீடு	2,000

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா ஒன்பது தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 05

விகாஷ் குழுமம்
மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான
ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்று

	ரூ. 000
வருமானம் (1,035,200+624,000-75,000)	1,584,200
விற்பனைக் கிரயம் (703,900+443,000-75,000 +1,000)	(1,072,900)
மொத்த இலாபம்	511,300
ஏனைய வருமானம்	
ஏனைய வருமானம் (3,600+900- 3,000 – 100)	1,400
சொத்துக்களின் அகற்றல் மூலமான இலாபம் (200+620-500)	320
செலவுகள்	
விநியோகச் செலவுகள் (640,0000+34,000)	(98,000)
நிர்வாகச் செலவுகள் (116,000+67,000 +3,000 +100)	(179,900)
நிதிச் செலவுகள் (18,500+23,400-100)	(41,800)
வரிக்கு முன்னரான இலாபம்	193,320
வரிச் செலவு (40,980+16,564)	(57,544)
வரிக்குப் பின்னரான இலாபம்	135,776
தாய்க்கம்பனி பங்குதாரர்களுக்கு உரித்தான இலாபம் (135,776 – 4,106)	131,670
கட்டுப்பாடற்ற பாத்தியத்துக்கு உரித்தான இலாபம் (செய்கை 1)	4,106
ஏனைய முற்றடக்க வருமானம்	355
மொத்த முற்றடக்க வருமானம்	136,131
தாய்க்கம்பனி பங்குதாரர்களுக்கு உரித்தான மொத்த முற்றடக்க வருமானம் (136,131 – 4,106)	132,025
கட்டுப்பாடற்ற பாத்தியத்துக்கு உரித்தான மொத்த முற்றடக்க வருமானம் (செய்கை 1)	4,106

செய்கைகள்

செய்கை 1: கட்டுப்பாடற்ற பாத்தியத்துக்கு உரித்தான இலாபம்

	இலாபம்
கட்டுப்பாடற்ற பாத்தியத்துக்கு உரித்தான ஏட்டு இலாபம் (41,556 X 10%)	4,156
+/- சீராக்கங்கள்	
இயந்திரத்திலிருந்தான அடையப்படாத இலாபம்	(50)
கட்டுப்பாடற்ற பாத்தியத்துக்கு உரித்தான இலாபம்	4,106

செய்கை 2: குழுக் கம்பனிகளுக்கு இடையேயான விற்பனை

	ரூபா 000
உருப்படிகளின் கிரயம்	60,000
கிரயத்தின் மீதான இலாபச் சேர்க்கை 25%	15,000
விற்பனைப் பெறுமதி	75,000

வரவு வருமானம் 75,000
செலவு விற்பனைக் கிரயம் 75,000

செய்கை 3: இருப்பு மீதான அடையப்படாத இலாபம் (விற்பனையாளர் - தாய்க் கம்பனி)

	ரூபா 000
இருப்பு	5,000
கிரயத்தின் மீது இலாபம்	25%
அடையப்படாத இலாபம் (5,000/125X25)	1,000

வரவு விற்பனைக் கிரயம் 1,000
செலவு இருப்பு 1,000

செய்கை 4: கம்பனிகளுக்கு இடையேயான முகாமைக் கட்டணம்

வரவு ஏனைய வருமானம் 3,000
செலவு நிர்வாக செலவுகள் 3,000

செய்கை 5: கம்பனிகளுக்கு இடையேயான வட்டி

	ரூபா 000
கடன்	2,000
வட்டி வீதம்	10%
காலம்	6/12
நிறுவனங்களுக்கிடையேயான வட்டி	100

வரவு வட்டி வருமானம் 100
செலவு வட்டிச் செலவு 100

செய்கை 6: இயந்திர அகற்றலிலான அடையப்படாத இலாபம் (விற்பனையாளர் - சேய்க் கம்பனி)

	ரூபா 000
இயந்திர அகற்றல் வருமானம்	10,000
கொண்டுசெல்கைப் பெறுமதி	9,500
அடையப்படாத இலாபம்	500

aat SRI LANKA

வரவு இயந்திர அகற்றல் ஆதாயம் 500 (NCI இலாபப்பங்கிற்கு சீராக்கப்பட்டது)
செலவு இயந்திரங்கள் 500

செய்கை 7: இயந்திரத்தின் அடையப்படாத இலாபத்தின் மீதான பெறுமானத் தேய்வு

	ரூபா 000
அடையப்படாத இலாபம்	500
பயன்தரு ஆயுள்	5
பயன்படுத்தப்பட்ட காலம்	1
அடையப்படாத இலாபத்தின் மீதான பெறுமானத் தேய்வு	100

வரவு இயந்திரத்தின் திரண்ட பெறுமானத் தேய்வு 100
செலவு நிர்வாகச் செலவுகள் 100

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா பத்து தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 04

(a)

விகிதம்	சூத்திரம்	ஆண்டு முடிவு 31/3/2025	ஆண்டு முடிவு 31/3/2024
மொத்த இலாப எல்லை	மொத்த இலாபம் X 100 / விற்பனை	=146,000/410,000X100 =35.6%	=107,500/320,000X100 =33.6%
நிகர இலாப எல்லை	வரிக்குப் பின் இலாபம் X 100 / விற்பனை	=42,884/410,000X100 =10.5%	=20,093/320,000X100 =6.3%
கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்	365 X சராசரி கடன்பட்டோர் / கடன் விற்பனை	=365/410,000X (54,000+42,000)/2 =43 நாட்கள்	=365/320,000X (42,000+32,000)/2 =42 நாட்கள்
இருப்பு வைத்தல் காலம்	365 X சராசரி இருப்பு / விற்பனைக் கிரயம்	=365/264,000X (82,000+75,000)/2 =109 நாட்கள்	=365/212,500X (75,000+20,000)/2 =82 நாட்கள்
பங்கு ஒன்றுக்கான உழைப்பு	சாதாரண பங்குதாரர்களுக்கு உரித்தான பங்கு ஒன்றுக்கான இலாபம் / சாதாரண பங்குகளின் எண்ணிக்கை	=42,884/20,000 =ரூபா. 2.1	=20,093/20,000 = ரூபா. 1

(10 புள்ளிகள்)

(b)

பெறுநர் : ரெக்ஸ் பிளஸ்சியின் முகாமை
அனுப்புநர் : நிதி ஆலோசகர்
விடயம் : மார்ச் 31, 2025 மற்றும் 2024 இல் முடிவடைந்த ஆண்டுகளை ஒப்பிடும் ரெக்ஸ் பிளஸ்சியின் சுருக்க அறிக்கை
திகதி : 25-07-2025

இலாபத்தன்மை

இந்த ஆண்டின்போது, மொத்த இலாப எல்லையானது 33.6% இலிருந்து 35.6% ஆக அதிகரித்துள்ளது. மேற்கூறிய அதிகரிப்புக்கான முக்கிய காரணமாக, ஆண்டு முழுவதும் விற்பனையில் ஏற்பட்ட ரூபா. 90 மில்லியன் அதிகரிப்பு கனாணப்படுகின்றது. விற்பனைக் கிரயத்திலான அதிகரிப்பானது, ரூபா. 51.5 மில்லியனாக மாத்திரமே உள்ளது. எனவே, நிறுவனம் சிறந்த சந்தைப்படுத்தல், விலை நிர்ணய முடிவுகள் மற்றும் கிரய முகாமையைக் காட்டுகிறது.

நிகர இலாப எல்லையானது 6.3% இலிருந்து 10.5% ஆக அதிகரித்துள்ளது. நிகர சேமிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் இந்த அதிகரிப்பு நிறுவனத்திற்கு நன்மை பயக்கத்தக்கதாகும். மொத்த இலாபத்தின் நன்மை மற்றும் வணிகத்தின் நிர்வாக, விநியோக, நிதி மற்றும் வரிச் செலவுகளின் சிறந்த முகாமை மற்றும் கட்டுப்பாடு ஆகியவை இதற்கான சாத்தியமான காரணங்களில் உள்ளடங்கும்.

முந்தைய ஆண்டை விட வணிகத்தின் ஒட்டுமொத்த இலாபத்தன்மை கணிசமாக மேம்பட்டுள்ளது. இந்த இலாபத்தன்மை அதிகரிப்பின் விளைவாக, பங்கு ஒன்றிற்கான வருவாய் முந்தைய ஆண்டில் ரூபா. 1 ஆகக் காணப்பட்டதில் இருந்து இவ்வாண்டில் ரூபா. 2.1 ஆக அதிகரித்துள்ளது. எனவே, முதலீட்டாளர்களின் இலாபத்தன்மை இந்த ஆண்டில் இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

செயற்திறன் மற்றும் தொழிற்படு மூலதன முகாமை

கடன் சேகரிப்புக் காலமானது முந்தைய ஆண்டில் 42 நாட்களில் இருந்து தற்போதைய ஆண்டில் 43 நாட்களாக சுமார் 01 நாள் அதிகரித்து உள்ளது. வித்தியாசம் மிகக் குறைவானதுதான். இருப்பினும், கடன் சேகரிப்பு முந்தைய ஆண்டை விட சற்று குறைந்துள்ளதாகத் தெரிகிறது. இது இந்த ஆண்டில் புதிய வாடிக்கையாளர்கள் மூலம் உருவாக்கப்பட்ட புதிய விற்பனை காரணமாக ஏற்பட்டதாக இருக்கலாம்.

ஆண்டு காலத்தின் போது இருப்பு வைத்தல் காலம் 82 நாட்களில் இருந்து 109 நாட்களாக அதிகரித்துள்ளது. இந்த 27 நாட்கள் அதிகரிப்பு இருப்பு முகாமையின் செயற்திறனில் வீழ்ச்சியைக் காட்டுகிறது. முந்தைய ஆண்டை விட இருப்பு களஞ்சியத்தில் 27 நாட்கள் மேலதிகமாக வைக்கப்பட்டுள்ளமையினால் இருப்பு வைத்தல் செலவு அதிகரித்துள்ளதுடன், இருப்பு சேத இழப்புக்கள் ஏற்படும் இடர் காணப்படுகின்றது. இது ஆண்டு முழுவதும் அதிகரித்த விற்பனையை நிர்வகிக்க மேலதிக இருப்புகளை வைத்திருப்பதன் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் அல்லது சரியான இருப்பு முகாமை இன்மை காரணமாக இருக்கலாம்.

ஒட்டுமொத்தமாக, கடன்பட்டோர் மற்றும் இருப்புகளின் அடிப்படையில் செயற்திறன் மற்றும் தொழிற்பாட்டு மூலதன முகாமை ஆண்டு காலத்தில் பலவீனமடைந்துள்ளது.

(5 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

பகுதி C முடிவு

aat SRI LANKA

Notice:

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)